**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**34 |
| Name | : | **செல்வி** |
| Father's / Husband Name | : | காமராஜ் |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 34/2025 |

**தேதி : 06.08.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். எதிரி ஏற்கெனவே எனக்கு கடன் பெற்று கொடுத்துள்ளார். எதிரி தன்னுடைய மாமனாரின் மருத்துவ செலவிற்காக என்னிடம் கடன் பெற்று தருமாறு கூறினார். நான் தனியார் நிதி நிறுவனத்திடமிருந்து ரூ.56,000/- பெற்றுக்கொடுத்தேன். மாத தவணைகளை அவரே செலுத்திவிடுவதாக கூறியதால் கடன் பெற்றுக்கொடுத்தேன். இரண்டு தவணைகளை வசந்தி இதுவரை செலுத்தியுள்ளார். அதற்கு மேல் தவணைகளை செலுத்தாததால் நிதி நிறுவனத்தின் ஊழியர்கள் எங்களிடம் வந்து தவணைகளை செலுத்துமாறு கேட்டனர். எதிரியை தேடி பார்த்தபோது அவர் தலைமறைவாகிவிட்டது தெரியவந்தது. தற்போது வரை மேற்படி நான் கடன் பெற்று தந்த தொகைக்கான நான்தான் தவணை கட்டிவருகிறேன். பின்னர் இதுசம்மந்தமாக சத்தியா என்பவர் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை 30.07.2024 அன்று விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u>

வசந்தி இரண்டுமுறை லோன் வாங்கி கொடுத்ததினால் நன்கு பழக்கம் என்றால் சரிதான். நான் கடன் தருவதற்கு முன்பு வசந்தி யாரையாவது ஏமாற்றினார் என்று கேள்விப்படவில்லை என்றால் சரிதான். நான் எந்த நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கிகொடுத்தேன் என்று போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சரியாக தவணை செலுத்திவிடுவதாக கூறிதான் என்னிடம் கடனை பெற்றார் என்றால் சரிதான். 3வது தவணை கேட்கும்போது பைனான்ஸ் கம்பெனி ஏஜெண்ட் என்னிடம் கேட்டார்கள். வசந்தியின் மாமனாரை நான் பார்த்ததில்லை. எதிரியின் தங்கைக்கு அபார்சன் ஆனதாலும், மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தினாலும் கடன் கேட்டதாக நான் போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணம் வசந்திக்கு இல்லை என்றாலும், 30,. 40 பேர் ஒருசேர கடன் கேட்டதால் அவரால் கடனை செலுத்த இயலவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வசந்திக்கு என்னை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றாலும், போலீஸார் சொல்லிக்கொடுத்துதான் நான் இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.